**தலைப்பு 309 – கட்டடத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டடத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கட்டடத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டடத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கமாக ஏசீஏ – 6 இல் குறிப்பிடப்பட்ட பெறுமதி பதியப்பட வேண்டியிருந்த போதிலும் அது ரூபா 810,991,575 ஆக ரூபா 15,792,164 குறைத்து பதியப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சிடல் குறிப்பில் குறிப்பிடப்பட்ட ரூபா 8,267,837.39 தொகை அது சரியான தேறிய சொத்துக்களின் பெறுமதியாக இருந்த போதிலும் இறுதி திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பில் (உத்தியோகபூர்வ இலட்சணையுடன்) தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 810,991,575 ஆக பதியப்பட்டிருந்தது. அது கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் வழுவின் அடிப்படையில் ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் சரிசெய்யப்பட்டிருந்தது. எனினும் ACA – 6 படிவத்தில் தவறுதலாக ரூபா 810,991,575 ஆக பதியப்பட்டிருந்தது. ஆதனால் ரூபா 15,792,164 குறைத்து காண்பிக்கின்றது. | 2021/03 அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்க பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ii) தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழ் தேறிய சொத்துக்களாக வைப்புக் கணக்கின் மீதியில் (ஏசீஏ – 4) முற்பணக் கணக்கின் மீதி (ஏசீஏ – 5ஏ) கழிக்கப்பட்டு திறைசேரியில் தேறிய சொத்துக்கள் பதியப்பட வேண்டியிருந்ததுடன் அப் பெறுமதி (ரூபா 1,273,419,810) ஆக இருந்த போதும் (ரூபா 1,257,627,647) ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 15,792,163 வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | மேலே (i) இன் படி வேறுபாடு ஏற்பட்டிருந்தமையால் திறைசேரி தேறிய சொத்துக்கள் ரூபா 15,792,163 வேறுபாடு ஏற்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். | 2021/03 அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் தேறிய சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | | |
| திறைசேரி செயலாளரின் MF/CG/02/(iv) ஆம் இலக்கம் மற்றும் 2017.06.28 ஆம் ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 576,795,555 | சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டுவருவதன் கீழ் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய தகவல்களுக்கிடையே வாகனம் மற்றும் கட்டிடங்கள் தவிர ஏனைய நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் (III) பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் (VII) அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொடர்பான தகவல்கள் தயாரிக்கப்படுகின்றது. (IV) நிர்மாணம் தொடர்பான தகவல்கள் எதிர்காலத்தின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரச மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களினால் கட்டடத் திணைக்களத்திற்கு கடந்த 04 வருட காலத்தில் கையளிக்கப்பட்ட ரூபா 846 மில்லியனை விஞ்சிய 37 நிர்மாண ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகளில் செயல்முன்னேற்றம் திருப்திகரமாக இல்லாத சந்தர்ப்பங்களின் போது | திணைக்களத்தால் நிறைவேற்றுவதற்கு கையேற்கப்பட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| நிறுத்தப்பட்டிருந்தது.<br><br>எனினும், இந்த முறையில் நிர்மாண ஒப்பந்தங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையின் மூலம் அரசாங்க நிறுவனமாக கட்டட திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து விடுவிக்க முடியாதிருந்தமையும், இந்த பணிகள் சரியான பிரகாரம் நிறைவேற்றாமையின் மூலம் அரச துறையின் பின்புலம் வீழ்ச்சிக்கு உட்படுகின்றமையும், அந்த ஒப்பந்தத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட நிதியில் சரியான விளைவுகள் பெறப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் உரிய உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கையளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள 45 ஒப்பந்தங்களில் 09 ஒப்பந்தங்கள் ரூபா 750 மில்லியன் அளவாகும். அதாவது மொத்த தொகையில் 77 சதவீத அளவான 09 ஒப்பந்தங்களை உள்ளடக்கியிருந்தது. 45 ஒப்பந்தங்களில் 10 மாத்திரம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. 14 ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்களின் பலவீனத்தின் அடிப்படையில் சேவைப் பங்களிப்பு நிறுவனங்களின் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. சில ஒப்பந்தங்கள் வேறு ஒப்பந்ததாரர்களை அழைத்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் காலத்தில் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமை மற்றும் விலைத்தளம்பல்களினால் செயற்திட்டங்களிலும் தாமதம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. | அவ்வாறில்லையாயின் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் நடாத்திச் செல்வதற்கு முடியாதுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 789 இன் பிரகாரம் பொதுவான நியதியாக அரசாங்கத்தின் சகல நிர்மாணங்கள் மற்றும் வேலைகளை | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 789 இன் பிரகாரமும் நிறுவனத்தின் நோக்கங்களின் பிரகாரமும் |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்படுத்துதல் தொடர்பாக அரசாங்கத்தின் வேலைகள் திணைக்களம் (கட்டடத் திணைக்களம்) பொறுப்பாக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட பணிகள் மற்றும் ஏனைய நிர்மாண பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்திற்குச் சொந்தமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 79 பொறியியலாளர்கள், 12 கட்டிட கலைஞர்கள், 34 திட்டமிடலாளர்கள், 13 உதவி அளவு ஆய்வாளர்கள் மற்றும் 75 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையுடைய நிர்மாண துறைக்குரிய பதவியணியினர் இருந்த போதிலும் ரூபா 1,012 மில்லியன் பெறுமதியான செயற்திட்டங்களில் அடையப்பட்டிருந்த சதவீதம் 50 வீதத்தை விட குறைவான செயலாற்றல் மாத்திரமாக இருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற மீதியாக கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட 6,262.84 சதுரமீற்றர் அளவான நில அளவுடன் 37 கட்டடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி குறிப்பிடப்படாதிருந்ததுடன் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கண்டியில் அமைந்துள்ள ஹந்தானயில் 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் கட்டுக்கலேவத்த அலுவலகக் கட்டிடத்தின் நிலஅளவு தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை . அதனால் நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களின் | பிரதான மதிப்பீட்டாளரை அழைத்து கட்டிடப் பணிப்பாளர் நாயகத்தின் 05-13-04-01 மற்றும் 2021.10.26 ஆந் திகதிய கடிதம் மூலம் தற்போது மதிப்பீடு செய்யப்படாதுள்ள காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது. அவ்வாறே கண்டியில் அமைந்துள்ள இரண்டு ஹந்தான உத்தியோகபூர்வ மற்றும் கட்டுகலேவத்த அலுவலக கட்டிடத்தின் நிலஅளவு என்பவற்றை எதிர்காலத்தில் அளவிட்டு அந்த தகவல்களை ஆவணங்களுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற காணிகள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையில் 45 காணிகளில் 12 காணிகளுக்கு மாத்திரம் உரித்துறுதி காணப்படுவதுடன் மிகுதி 33 காணிகளுக்காக உரித்துறுதிகள் காணப்படவில்லை. இதில் குறிப்பிடப்பட்ட 45 காணிகளுக்கிடையே 19 காணிகள் (08 ஏக்கர் 02 றூட் 37.82 பேர்ச்) மதிப்பீட்டு பெறுமதி குறிப்பிடப்படாதிருந்ததுடன் அறுகம்பேயில் அமைந்துள்ள காணியின் நிலஅளவு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை . அதன் பிரகாரம் திணைக்களத்தின் நிலையான சொத்துக்களில் குறிப்பிடப்பட்ட காணிகளின் பெறுமதியின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | இந்த திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற 45 காணிகளுக்கிடையே 12 காணிகளுக்காக உரித்துறுதி பெறப்பட்டுள்ளதுடன் மிகுதி காணிகளுக்குரிய உரித்துறுதிகளை பெற்றுக் கொள்வதற்காக உரிய பிரதேச செயலாளர்களுடனும், காணி ஆணையாளர் நாயகத்துடனும் தொடர்பினை ஏற்படுத்தி மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த திணைக்களத்திற்கு சொந்தமான அறுகம்பேயில் அமைந்துள்ள காணியின் உரித்துறுதி கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்குவதற்காக உரிய அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்தக் காணிப் பகுதியை பரீட்சிக்கும் போது அது களப்பு மற்றும் சேறு நிறைந்த நிலைமையில் காணப்படுகின்றமையால் சரியான முறையில் அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததாக இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்தக் காணிப் பகுதி பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றமையால் அதற்காக மாற்று | உரிய உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கும் மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணியொன்றை வழங்குமாறு பொத்துவில் பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. | |
| (ஈ) | தியத்தலாவ பொலிசிற்கு அருகில் அமைந்துள்ள 01 றூட் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 10,550,000 உடன் உத்தியோகபூர்வ இல்லத்திற்குரிய காணி பிரதான பொறியியலாளர் (Kandy II) இன் மூலம் பதுளை பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்ட போதும் அது பதுளை பிரதேச செயலாளரால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் மீண்டும் அந்த ஆதனம் மாவட்ட அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக மீண்டும் திணைக்களத்திற்கு கையளிக்குமாறு 2017.04.11 ஆந் திகதிய 12-06-64 ஆம் இலக்க கடிதம் மூலம் கண்டி பிரதான பொறியியலாளரால் கட்டட பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இது தொடர்பான கோவைகளை பரீட்சித்த போது இந்த கையளித்தல் தொடர்பான தகவல்களை கண்டறிய முடியாதிருந்தது. | கட்டடத் திணைக்களத்திற்குரிய தியத்தலாவ பொலிசிற்கு அருகில் அமைந்துள்ள காணி பதுளை பிரதேச செயலகத்திற்கு 2014 ஆம் ஆண்டின் போதே கையளிக்கப்பட்டிருந்தது. இந்த கையளித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்ட சந்தர்ப்பத்தின் போது எங்களுக்கு மாற்றுக் காணி ஒன்றை வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. உரிய மாற்று காணியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய செயற்பாடுகளை விரைவுபடுத்து வதற்கும், உரிய தீர்த்தல்களை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சுற்றுலா விடுதி பராமரிப்பு<br>---------------------------------------------<br>கட்டட திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணிகளில் ஒன்றாக ‘‘அரசாங்கத்தின் கட்டடங்களை பராமரித்தல், புதிதாக ஒன்றுசேர்த்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்’’ ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் திணைக்களத்திற்கு வருமானத்தை உழைக்க கூடியதாகவிருந்த சுற்றுலா விடுதிகள் தொடர்பாக | | |

| | | |
|---|---|---|
| பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) கதிர்காமம் சுற்றுலா விடுதி<br>--------------------------------------------- | | |
| - குளிக்கும் அறை கதவுகள் நனைந்து துருப்பிடித்து அந்த குளியல் அறைக்குள் அசுத்தமான நிலைமையில் காணப்பட்டமை.<br>- சுவர் வெடித்துள்ள இடங்கள் காணப்பட்டதுடன் குளியலறை சுவரில் பதித்துள்ள டைல்களுடன் வெடித்திருந்தது. | உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. | சுற்றுலா விடுதியை உரிய பிரகாரம் பராமரித்து தங்குபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நுவரெலியா சுற்றுலா விடுதி<br>--------------------------------------------- | | |
| - சுற்றுலா விடுதியில் குளியலறையில் நீர் டெப் குழாய்கள் வெடித்திருந்த சந்தர்ப்பங்கள் மற்றும் குளியலறையில் காணப்பட்ட சுடுநீர் சூடாக்கி உரிய பிரகாரம் செயற்படாதிருந்த சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் கட்டிடத்திலும் நவீனமயப்படுத்த வேண்டிய இடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.<br><br>-அருகில் உள்ள சுற்றாடல் விருப்பமானதாக ஒழுங்கமைக்கப்படாதிருந்த துடன் தங்குபவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதலும் நலிவான நிலைமையில் காணப்பட்டது. | சில பகுதிகள் உடைந்திருந்ததுடன் வர்ணப்பூச்சுக்கள் செய்யப்படும் வரை துப்பரவாக்குமாறு சுற்றுலா விடுதி பொறுப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. சகல பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ஆண்டின் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்ட போதும் நிதியேற்பாடு கிடைக்காதிருந்ததுடன் இந்த ஆண்டிற்காக தற்போது மதிப்பீடு தயாரிக்கப்படுவதுடன் நிதியேற்பாடு கிடைத்தவுடன் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். அருகில் உள்ள சுற்றுச் சூழலையும், வேலி ஓரங்களையும் வெட்டும்படி சுற்றுலா விடுதி பொறுப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சுற்றுலா விடுதியை சரியான முறையில் பராமரித்து | சுற்றுலா விடுதியை உரிய பிரகாரம் பராமரித்து தங்குபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செல்வதற்காக சுற்றுலா விடுதி பொறுப்பாளருக்கு உதவி வழங்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம். | |
| (iii) | நமுணுகுல சுற்றுலா விடுதி 1 மற்றும் 2<br>---------------------------------------------<br>-இலக்கம் 1 சுற்றுலா விடுதியில் ஒரு அறையில் டெப் நீர்க்குழாய்கள் உரிய பிரகாரம் செயற்படாதிருந்ததுடன் குளியறையில் சேர்கின்ற நீர் சரியான பிரகாரம் வழிந்தோடாத நிலையில் காணப்பட்டது.<br><br>- முன்பக்க கூரையின் சிவ்லிம் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.<br><br>- சுற்றுலா விடுதியின் பின் பக்கத்தில் உள்ள கட்டிடம் விழும் நிலையில் காணப்பட்டது.<br><br>- சுற்றுலா விடுதிக்காக உள்ளபடியாக சுற்றுலா பொறுப்பாளர் ஒருவர் சேர்க்கப்படவில்லை. | 01. இலக்கம் 02 என்ற பகுதிகள் சுத்தத்தை பேணுதல் தொடர்பாக சுற்றுலா விடுதி பொறுப்பாளருக்கு 2022.04.21 ஆந் திகதி கடிதம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>02. இந்த ஆண்டு பழுதுபார்த்தல்களை மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயாயரிக்கப்படுகின்றது. அருகில் உள்ள பகுதியை துப்பரவாக்குதல் தொடர்பாக சுற்றுலா விடுதிப் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>03. இந்த வருடத்தில் திருத்துவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. | சுற்றுலா விடுதியை உரிய பிரகாரம் பராமரித்து தங்குபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | ஹந்தான சுற்றுலா விடுதியின் சமயலறையில் டைல் கழன்றிருந்ததுடன் அறை இலக்கம் 02 இல் யன்னல் துருப்பிடித்து கழன்று பாதுகாப்பின்றி காணப்பட்டதுடன் அறையில் ஸ்லெப்பில் இருந்து நீர் கசிந்து காணப்பட்டது. | 01. கடந்த ஆண்டுகளில் நிதியேற்பாடு கிடைக்காமையால் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை . இந்த ஆண்டிற்காகவும் தற்போது மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதியேற்பாடு கிடைத்தவுடன் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தயவுடன் அறியத் தருகின்றோம்.<br><br>02. விறாந்தையில் கொங்கிறீட் தட்டுக்களில் நீர் கசிவு ஏற்பட்டிருந்ததுடன் இந்த | சுற்றுலா விடுதியை உரிய பிரகாரம் பராமரித்து தங்குபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிலைமையை மாற்றியமைப்பதற்காக விறாந்தையின் கூரையை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக செலவாகின்ற பணம் மேற்கூறப்பட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள துடன் நிதியேற்பாடு கிடைத்தவுடன் உடனடியாக பணிகளை நிறைவேற்ற முடியுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (v) | யாழ்ப்பாணம் சுற்றுலா விடுதி<br>--------------------------------------------- | | |
| | - கொமட் சிஸ்டம் சரியான பிரகாரம் செயற்படாதிருந்ததுடன் கொமட் பேசன் உடைந்து காணப்பட்டது. அறைகளில் டைல் வெடித்திருந்ததுடன் அதன் பூர்த்தி மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.<br><br>- குளியலறையில் துணிகளை போடுவதற்காக பொருத்தப்பட்டுள்ள உபகரணம் அழிவடைந்து காணப்பட்டதுடன் குளியலறையில் நீர் வழிந்தோடுவதற்காக சரியான முறைமையொன்று ஈடுபடுத்தப்படாமையின் காரணமாக குளியலறை நீரினால் நிறைந்து காணப்பட்டது.<br><br>- நீர்த்தாங்கியில் நீர்க் கசிவு நீண்டகாலமாக காணப்படுவதுடன் அதன் காரணமாக கணிசமான நீர் விரயமாகிச் செல்கின்றது. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றுலா விடுதியை உரிய பிரகாரம் பராமரித்து தங்குபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | தங்காலை சுற்றுலா விடுதி<br>--------------------------------------------- | | |
| | இந்த சுற்றுலா விடுதி நீண்டகாலம் முதல் சுற்றுலாதாரிகளுக்கு வழங்கப்படாதிருந்த போதிலும் சுற்றுலா | பொருட் பதிவேட்டில் நாளதுவரையாக்கப்பட்டு ள்ளது. “தற்போது அம்பாந்தோட்டை பிரதேச செயலகம் இந்தக் | நீர், மின்சார செலவினங்கள் கணிசமாக உயர்வடைந்து சென்றமை |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டிருந்தனர். கடந்த 02 வருட காலத்தில் இந்த சுற்றுலா விடுதி விருந்தினர்களுக்காக ஒதுக்கப்படாததாக பதிலளிக்கப்பட்ட போதும் 2019 ஆம் ஆண்டில் நீர்க் கட்டணம் ரூபா 29,000 மற்றும் மின்சாரக் கட்டணம் ரூபா 40,815 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் நீர்க்கட்டணம் ரூபா 107,375 மற்றும் மின்சாரக் கட்டணம் ரூபா 155,489 தொகையும், 2021 ஆம் ஆண்டில் நீர்க் கட்டணம் ரூபா 97,088 மற்றும் மின்சாரக் கட்டணம் ரூபா 144,956 ஆகும். அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நீர்க்கட்டணம் 2020 ஆம் ஆண்டில் 270 சதவீதத்தினாலும், 2021 ஆம் ஆண்டில் 234 சதவீதத்தினாலும் மற்றும் மின்சாரக் கட்டணம் 2020 ஆம் ஆண்டில் 280 சதவீதத்தினாலும், 2021 ஆம் ஆண்டில் 255 சதவீதத்தினாலும் அசாதாரணமாக அதிகரித்திருந்தது. | கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படுவதுடன் மாத்தறை பிரதேச அலுவலகத்திற்குரிய பொருட்கள் போன்றவை இந்தக் கட்டிடத்தில் காணப்படுகின்றது. அதனால் உரிய பொருட்களின் பாதுகாபபிற்காகவும் மற்றும் அந்தக் கட்டிடத்தை சரியான பிரகாரம் நடாத்திச் செல்வதற்காகவும் பாதுகாப்பு கடைமைகளுக்காகவும் தற்போது தங்காலை சுற்றுலா விடுதியில் நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற சுற்றுலா விடுதி பொறுப்பாளர் இருவரினதும் சேவை அதற்காக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த இரண்டு வருடங்களில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சுற்றுலா விடுதிகள் விருந்தினர்களுக்காக ஒதுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் விருந்தினர்களுக்காக சுற்றுலா விடுதியை ஒதுக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என மேலும் அறியத்தருகின்றோம்.'' | தொடர்பாக திணைக்களம் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சுற்றுலா விடுதியில் தங்குமிடத்தை பெற்ற சுற்றுலாதாரிகள் தங்கியிருக்கின்ற காலத்தில் ஏதாவது நட்ட இழப்புக்கள் ஏற்படுமாயின் உரிய கட்டணம் மற்றும் பயன்படுத்தப்படுகின்ற தலையணை உறை | இது தொடர்பாக முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடி தீர்மானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். காணப்படுகின்ற | சுற்றுலா விடுதியை சரியான பிரகாரம் பராமரித்து தங்குபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

மற்றும் கட்டில்களில் உள்ள பெட்சீட்டுக்கள் கழுவி சுத்தப்படுத்துவதற்கான கட்டணம் சுற்றுலா பொறுப்பாளருக்கு செலுத்தி பற்றுச்சீட்டு பெறப்பட வேண்டியிருந்தமை, தங்குபவர்களுக்கான ஆலோசனைகளை உள்ளடக்கிய கையேடுகளில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் சுற்றுலா பொறுப்பாளரினால் அவ்வாறு பற்றுச்சீட்டு பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. அதற்குப் பதிலாக கடதாசியில் குறிப்பிடப்பட்ட பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்ததாக தங்குபவர்களினால் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இந்த சுற்றுலா விடுதியை வழங்கும் போது தினமொன்றுக்கு அறைக்கு ரூபா 1,500 இற்கும் ரூபா 2,000 இற்கும் இடையிலான கட்டணம் அறவிடப்படுகின்றமையால் அடிப்படை வசதிகளையேனும் வழங்குவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிதியேற்பாட்டின் அடிப்படையில் அடிப்படை வசதிகள் இயலுமான வகையில் ஆகக்கூடியதாக வழங்கப்பட்டுள்ளது.

வேண்டும்.

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | | | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் | | | | | | | |
| செயற்திட்டத்தின் வகை | ஆரம்பிக்க ப் பட்ட செயற் திட்டங்கள ின் எண்ணிக் கை | எந்தவொரு பணிகளும் நிறைவேற்றப்படா த செயற் திட்டங்களின் எண்ணிக்கை | 50 சதவீதத்திற்கு குறைவான செயல் முன்னேற்றம் உள்ள செயற்திட்டங்கள் நிதியேற்பா டு ரூபா மில் | செயற்திட் டம் எண்ணிக் கை | செயல் முன்னேற் (சதவீதம் | | |
| ிற்பனை சுழற்சி செயற்திட்டம் (Turnkey) | 119 | 14 | 302.1 | 24 | 5-50 | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட மோசமான தொற்றுநோய் நிலைமை. நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையால் ஒப்பந்தகாரர்களின் கொடுப்பனவுகளில் தாமதம், நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை போன்றவை நேரடியாகத் தாக்கமளித்திருந்தது. மேற்கூறப்பட்ட நிலைமையின் கீழ் கட்டடத் திணைக்களத்தின் இயலளவின் பிரகாரம் செயற்திட்டங்களில் செயல் முன்னேற்றத்தை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஆலோசனை ரீதியிலான செயற்திட்டம் (Consultancy) | 68 | 07 | 528.1 | 09 | 5-47 | | |
| செயற்திட்ட முகாமைத்துவ செயற்திட்டம் (Project Management) | 28 | 01 | 171.89 | 06 | 10-50 | | |
| பராமரிப்பு செயற்திட்டம் (Maintenance) | 40 | 06 | 10.56 | 03 | 1-50 | | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. மீளாய்வாண்டிற்கான ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 341 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான செலவினம் ரூபா 687,441 ஆக இருந்தது. | சிரேஷ்ட நிலையில் பொறியியலாளர் சேவை – 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பதவி வெற்றிடங்களை நிரப்புமாறு அரச நிர்வாக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. திணைக்கள மயப்படுத்தப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகாரத்திற்கு அனுப்பி எழுத்துமூல | நிறுவனத்தின் நோக்கங்களை உரிய பிரகாரம் அடைந்து கொள்வதற்கு திணைக்களத்தால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | ஒப்பந்தம் | |
| சிரேஷ்ட நிலை | 126 | 99 | - | 27 |
| மூன்றாம் நிலை | 24 | 07 | 01 | 17 |
| இரண்டாம் நிலை | 285 | 250 | - | 35 |
| ஆரம்ப நிலை | 178 | 136 | 03 | 42 |
| மொத்தம் | 613 | 492 | 04 | 121 |

பரீட்சைகளை நடாத்தி மிகுதி வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு திணைக்களம் இதுவரையும் தவறியிருந்தது.